
ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

India ECHOES
ONE WORLD ONE HUMANITY
For Private Circulation Only



"தியானம் செய்யுங்கள், படிப்படியாக எல்லாவற்றையும் அகற்றிவிடுங்கள். என் சாதனா ஒழுங்காகவும், சரியான முறையிலும், பத்து நியமங்களின் குறிக்கோளைச்சார்ந்தும் அமைந்தால், எவ்வித பண்புகளுடன் பிறந்தேனோ, அவையெல்லாம் அகன்று, பண்புகளற்ற ஒரு ஆத்மாவாக நான் இருப்பதைக் காண்பேன்."

- மாஸ்டர் 9/10/10 அன்று, நற்பண்புகளை வளர்த்துக்கொள்வதைப் பற்றிய கருத்தரங்கில் பேசிய உரையிலிருந்து.

செப்.21ம் தேதி, வட அமெரிக்க அப்யாசிகள் கூட்டத்தொடர் முடிந்தபின், மாஸ்டர் தன் நேரத்தை "காயத்ரி"யிலும், ஆசிரமத்திலும் பகிர்ந்து கொண்டார். அவர் வார நாட்களில் "காயத்ரி"யிலும், வார இறுதி நாட்களில் ஆசிரமத்திலும் தன் நேரத்தை செலவழித்தார். "காயத்ரி"யில் அப்யாசிகளை சந்தித்தார். சில சமயம் சத்சங்கமும் அளித்தார்.

ஒரு நாள் அவர் காபி அருந்தியபின், மருத்துவர் மற்றும் நோயாளிக்கிடையே உள்ள உறவைப்பற்றி குறிப்பிட்டு பேசுகையில், நம்பிக்கையின்மையின் மூலம் பயம் வந்துவிடுவதைச் சுட்டிக் காட்டினார்.

செப்.9ம் தேதியிலிருந்து 23ம் தேதி வரை, இரண்டு வார காலம், மாஸ்டர் ஆசிரமத்திலேயே தங்கினார்.

செப். 16ம் தேதி, மாஸ்டர், புதுச்சேரிக்கு ஒரு நாள் விஜயம் செய்தார். புதுச்சேரி, கடலூர், விழுப்புரம், மற்றும் நெய்வேலியிலிருந்து, 60 அப்யாசிகளும், 20 சிறுவர், சிறுமிகளும் வந்திருந்தனர். Dune Eco Resort என்ற ஹோட்டலில், அவருக்கு சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜவஹர் நவோதயா பள்ளியில், சத்சங்கம், உறைவிடம், மற்றும் உணவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாலையில், பள்ளி மாணவர்கள் மாஸ்டரை வரவேற்று, பஜன் பாடல்கள் பாடினர். பின் சத்சங்கம் நடைபெற்றது. செப். 17ம் தேதி காலை, மாஸ்டரின் சத்சங்கத்திற்குப்பின், சகோ. அஜய் பட்டர் சொற்பொழிவாற்றினார். பின் சகோதரி வர்ஜின், அழகாக கதக் நடனம் ஆடினார். பள்ளி சிப்பந்திகளில் 10 பேர் தியானம் ஆரம்பிக்க விருப்பம் தெரிவித்தனர். மாஸ்டர், சென்னையிலிருந்து தன்னுடன் வந்திருந்த அப்யாசிகளுடன் பேசிக்கொண்டும், சிறிது ஓய்வெடுத்துக்கொண்டும் தன் நேரத்தை செலவிட்டார். மாலை 4:45 மணிக்கு, அவர் சென்னைக்கு திரும்பிச் சென்றார். புதுச்சேரி வாழ் சிறு அப்யாசி குழுவிற்கு மாஸ்டரின் எதிர்பாராத இவ்விஜயமும், அவரின் அருகாமையும் ஆச்சரியமான பரிசாக அமைந்தது.



மாஸ்டர், ஓமேகா பள்ளிக்கு பலமுறை சென்றார். ஒரு சந்தர்ப்பத்தில், விடுதி மாணவர்களுடன் இரவு உணவு அருந்தினார். மற்றொரு சமயம், கிரிக்கெட் போட்டியை கண்டு ரசித்தார். மாணவர் குழு ஒன்று பாடியதை கேட்ட அவர், இம் மாதிரி இசைப்பயணம் மென்மேலும் பள்ளியில் தொடருமென நம்பிக்கை தெரிவித்தார். மாணவர்களிடம் பேசும் போது அவர், அறிவை விடவும் விவேகத்தை கைக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். ஹார்வார்ட் பள்ளி போன்று பெயர் வாங்குவதைக் காட்டிலும், இப்பள்ளி ஆன்மீகத்தில் தலைசிறந்தது என பெயர் பெறுவதையே தான் வேண்டுவதாகக்கூறினார்.





ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்





மாஸ்டர் இரண்டு மாத காலமாக சென்னையிலேயே தங்கியதாலும், அவரை அடிக்கடி காண முடிந்ததாலும், சென்னை அப்யாசிகள் மிகவும் மகிழ்வுற்றனர். மாஸ்டரின் குடிலும் திறந்தே இருந்ததால், அங்கும் அவரை அடிக்கடி பார்க்க முடிந்தது. சிலமுறை, மாஸ்டர் வாரநாட்களின் மாலைநேரத்தில் அளிக்கும் சத்சங்கத்திலும் பங்கேற்க முடிந்தது.

ஞாயிறு சத்சங்கம், யாவருக்கும் மனதில் மிகுந்த ஆனந்தம் அளிக்கிறது. ஞாயிறன்று, மாஸ்டருடன் சத்சங்கத்தில் பங்கேற்பதை எல்லா அப்யாசிகளும் வாரம் முழுவதும் ஆவலோடு எதிர்பார்க்கின்றனர். ஹுப்ளி, திண்டுக்கல் மற்றும் பலமையங்களிலிருந்து வந்திருந்த அப்யாசி குழுக்களும், மாஸ்டரை சந்தித்து அவரின் அன்பையும் ஆசிகளையும் பெற்றுச்சென்றனர்.

குடிலின் வடகிழக்கு மூலையில், ராதா, கிருஷ்ணர் சிலைகளை மாஸ்டர் திறந்து வைத்தார். பெண்மையை பிரதிபலிக்கும் வண்ணம் அமைந்த சிலை, வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது. பூஜா, சிரத்தா, மற்றும் அர்ச்சனா சிலைகள் தியானக்கூடத்தின் இருபுறமும் அமைந்த புல்வெளிகளில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன. கங்கா சிலை, தியான மண்டபத்தை எதிர் நோக்கிய வண்ணம், சாலையின் மறுபுறம் அமைக்கப்படவுள்ளது.






நற்பண்புகளை வளர்த்துக்கொள்வது பற்றிய ஒரு கருத்தரங்கம், பாபூஜி மெமோரியல் ஆசிரமம், சென்னையில், அக். 9-12 தேதிகளில் நடைபெற்றது. இதில், மிஷனின் (இந்தியாவிலுள்ள) செயற்குழு உறுப்பினர்கள், மண்டலப்பொறுப்பளர்கள், பல மையப்பொறுப்பாளர்கள் மற்றும் சில செயலர்கள் உட்பட, சுமார் 100 பேர் பங்கேற்றனர்.

மாஸ்டரின் அறைகூவல் மிகத்தெளிவாக இருந்தது. அவர், பிறரை மாற்ற முயற்சிக்குமுன், தம்மையே மாற்றிக்கொள்ளவேண்டும் என கூறினார். 9ம் தேதியன்று மாலை, பங்கேற்றவர்கள் வந்து சேர்ந்தபொழுது, மாஸ்டர் அவர்களுடன், தங்கும் விடுதி 'A' யில், இரவு உணவு அருந்த, திடீரென முடிவு செய்தார். இக்கருத்தரங்கை மிக ஆர்வமுடன் எதிர்பார்ப்பதாக சொன்ன அவர், " நான் உங்கள் மனதை குழப்பத்தில் ஆழ்த்த போகிறேன். ஏனெனில் அதன் பின்னர்தான் தெளிவு பிறக்கும்" எனக்கூறினார்.



அதை உண்மையாக்கும் பொருட்டு, அவர் தன் முன்னுரையில், வேதங்கள், மஹாபாரதம், பகவத்கீதை, ராமாயணம் முதலியவற்றில் காணப்படும் முரண்பாடுகளை சுட்டிகாட்டி, அவை எவ்விதம் மனதில் நல்லொழுக்கம், நன்நெறி போன்றவற்றின் மீது குழப்பங்களைத் தோற்றுவிக்கிறது என்பதை எடுத்துரைத்தார். இறுதியாக, நாம் அனைவரும் இதயத்திற்குத் திரும்பிவிட வேண்டும், வேறு ஒன்றுமே இல்லை எனக் கூறினார். பிறகு அவர் பேசியபொழுது, "நான் என் உரையில் பலவற்றைத் தகர்த்துவிட்டேன். யார் சிந்திக்கிறார்களோ அவர்கள் தைரியசாலிகள். நாமெல்லோரும் துணிவாக சிந்தனை செய்யவேண்டும்" எனக்கூறினார்.

கருத்தரங்கத்தில் பங்கேற்றவர்கள், பல கோணங்களில் தம் கருத்துக்களை எடுத்துரைத்தனர்.



யோகக்கலையின் மூலம் ஒரு பார்வை (சகோ. K.S. பாலசுப்பிரமணியன்) லாலாஜி மகராஜின் போதனைகள் (சகோ. சந்தோஷ் ஸ்ரீனிவாசன்) வணிகத்தில் பண்பின் முக்கியத்துவம் (சகோ. பிரமோத் சரத் ஜோஷி) நல்லொழுக்கத்தில் அதன் வெளிப்பாடு (சகோ. P.R. கிருஷ்ணா) நன்னெறி மூலம் அடையும் மனப்பாங்கு (சகோ. கேப்டன். சக்ரபாணி) பத்து நியமங்களின் போதனைகள் (சகோ. S. பிரகாஷ்) பங்கேற்றவர்கள் பத்து குழுக்களாக பிரிந்து, இதைச்சார்ந்த மற்ற விஷயங்களைப்பற்றி விவாதித்து,

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்



தங்கள் குறிப்புக்களை முன்வைத்தனர்.

12ந் தேதி அன்று, சகோதரி அனுராதா பாட்டியா, ஆய்வரங்கைப் பற்றித் தொகுத்து வழங்கியபின், மாஸ்டர் தனது முடிவுரையில், முந்தைய கருத்தைத் தொடர்ந்து, நாம் குறிப்பிட்ட இடங்களில், நமது குணம் மற்றும் மனப்பாங்கைச் சரி செய்துகொள்ள வேண்டியதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டினார்.

- ❖சாதாரணமான நடவடிக்கை மற்றும் நடத்தையில்கூட நாம் மாறவேண்டும்.
- ❖நாம் துன்பம் அனுபவிக்காமல், ஆன்மீக முன்னேற்றம் சாத்தியமில்லை. எனவே தான் பாபுஜி மகராஜ், நம் மிஷனில் அப்யாசிகளுக்கு சொகுசான வசதிகள் அளிப்பதில்லை என்று கூறினார்.
- ❖ஒழுக்கத்தின் தரக்குறைவுதான் எய்ட்ஸ் போன்றநோய்களுக்குக் காரணம். மேலை நாடுகளில், ஆண்-பெண் உறவின் ஒழுக்கத்தை அழிக்க, மாத்திரை ஒன்றுதான் காரணமாக இருந்தது.
- ❖நமது பண்பை வளர்த்துக்கொள்வதற்கான முயற்சிகளுக்கு, ஆசை என்ற காரணம் தான் இடையூறாக இருக்கிறது என்பதை, உரையாற்றியவர்கள் சுட்டிக்காட்டி இருக்கவேண்டும். அது நம் மனோபலத்தை அழித்துவிடுகிறது.
- ❖இவ்வுலகிற்கு அளிப்பதில் பங்கேற்காமல், இதன் மூலதனங்களைப் பயன்படுத்திக் கொள்வதில் நோக்கம் கொண்டவர்களும், ஒழுக்கமற்றவர்கள்தான்.
- ❖உங்களிடம் தேவைக்கு அதிகமாக ஒருரூபாய் இருந்தாலும், நீங்கள் வழி தவற நேரும். நம் அப்யாசிகளில் பலர், பணத்தின்மேலான பேராசையால், கஷ்டத்திலும், மிகுந்த நஷ்டத்திலும் இருக்கிறார்கள்.
- ❖இந்தியாவில், பாலியல் ஒழுக்கம்தான் மிக அதிகமாக வலியுறுத்தப்படுகிறது. மற்ற ஒழுக்கக்குறைகள் பற்றி, தணிந்த மனப்பாங்கே உள்ளது.
- ❖மிஷனின் நாடிகளான பிரிபெக்ட்கள், சோம்பலைத் தவிர்த்து, தங்கள் பணிகளில் மாஸ்டரிடம் நம்பிக்கைஉள்ளவர்களாக இருக்க வேண்டும்.

சகோ. ராஜேஷ் ராதோட், மற்றும் சகோ. சத்யநாராயணன், ஆய்வரங்கை ஒருங்கிணைத்து, ஏற்பாடுகளைக் கவனித்தனர். மாஸ்டரின் ஆணித்தரமான உரைகள், சிந்தித்து ஆராய்தல், கலந்துரையாடல் ஆகியவை, பங்கேற்றவர்களுக்கு ஒரு விழிப்புணர்வை அளித்தன.

மாஸ்டர் ஆர்வமுடன் கவனிக்க, இக்கூட்டம், இதயத்திற்கும், மனதிற்கும் தீவிரமான பயிற்சியாக இருந்தது.

ஓஷியானிக் மற்றும் லத்தின் - அமெரிக்க ஆய்வரங்கு, அக். 14 - 19 நடைபெற்றது. துவக்க உரை வழங்கிய மாஸ்டர், மணப்பாக்கத்திற்கு வருவது, தாய்வீட்டிற்கு வருவது போலாகும் என்று கூறி, அதனை ஆன்மீக இல்லத்திற்கு ஒப்பிட்டார். அவர், "நாம் இங்கே வருவது நம் இதயத்தை



மேம்படுத்தி சுத்திகரித்து, அன்பின் கருவியாக இருந்து, அதனால் மனிதப் பண்புகளான கருணை, இரக்கம், மற்றவர்களுக்காக அக்கறை கொள்ளுதல், மற்றவர்களுடன்

பங்கிட்டுக் கொள்ளுதல், மற்றவர்களுடன் இணைந்து வாழ்தல் போன்றவற்றை வெளிப்படுத்திய இதயத்தின் இயற்கையான மூலநிலைக்குத் திரும்பவும் கொண்டு செல்வதற்கே ஆகும். இப்பொழுதெல்லாம் இவை அனைத்தும் மறைந்தேபோய்விட்டன.' என்று கூறினார்.

அவர், 6 நாட்களில் 5 முறை காலை சத்சங்கம் நடத்தினார். இரு திருமணங்களும் இருந்தன. சகோ. P.R. கிருஷ்ணா, "வேற்றுமையில் ஒற்றுமை" என்பது பற்றியும், சகோ. சந்தோஷ் காஞ்சி "அவரும் நானும்" என்பது பற்றியும் பேசினர்.

மாலையில், மாஸ்டர் தனது அலுவலகத்தில், அப்யாசிகளை குழுக்களாகச் சந்தித்து, உரையாடினார். நியுஜிலாந்து, மற்றும் ஆஸ்திரேலியாவின் வருடாந்திர நிர்வாகப்பொதுக்கூட்டத்திலும் பங்கேற்றார். வருகை புரிந்த 500 அப்யாசிகளில், 100 பேர் லத்தின் அமெரிக்காவில் இருந்தும், 15 பேர் லாரீயூனியனிலிருந்தும், மற்ற அனைவரும் ஓஷியானாவிலிருந்தும் வந்திருந்தனர்.

மாஸ்டர் அனைத்து நாட்களிலும் சத்சங்கம் நடத்தினார். அவர் ஒரு துவக்க உரையும், முடிவுரையும் வழங்கினார்.

## ஸ்ம்ருதி தன்னார்வத்தொண்டர்சந்திப்பு, மத்தியப்பிரதேசம்

ஆகஸ்ட் 22, 2010 அன்று, மத்தியப்பிரதேசமண்டலத்தைச் சேர்ந்த, பல்வேறு மையங்களின், ஸ்ம்ருதி தன்னார்வத்தொண்டர்களின் கூட்டம், ஜபல்பூர் ஆசிரமத்தில் நடைபெற்றது. பங்கேற்ற 45 தொண்டர்கள், இந்தூர், போபால், ஜபல்பூர், உஜ்ஜயின் போன்ற பெரிய மையங்களிலிருந்தும், பாலாகட், திக்கம்கர், ஜாவோரா, சோஹக்பூர், கைராஸ்~பூர், டியோன்டா, கன்ஜ்பசோடா, இட்ராசி, ரேவா, நஸ்ருலாகன்ஜ் போன்ற தொலைதூரத்தில் உள்ள சிறிய மையங்களில் இருந்தும் வந்திருந்தனர். இத்தகைய கூட்டம், மண்டல அளவில் முதன்முறையாக நடைபெற்றதால், அனைவரும் மிகுந்த உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் இருந்தனர்.

சகோ. ராஜேஷ் ரவேர்கரின், வரவேற்புரைக்குப்பின், அனைவரும் அறிமுகம் செய்துகொண்டனர். சகோ. வினோத், நிகழ்ச்சியைத் துவக்கி வைத்து," விஸ்பர்ஸ் ஃப்ரம் தி ப்ரைட்டர் வர்ல்ட்" புத்தகத்திலிருந்து ஒருசெய்தியை பகிர்ந்து கொண்டார்.

கருத்துரைகளுக்குப் பின்பு, வி பி எஸ் இ ன் பல்வேறு அம்சங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது. ஒவ்வொருமையமும், குறைந்தபட்சம் ஒருபள்ளியையாவது தேர்ந்தெடுத்து, வி பி எஸ் இ திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் முயற்சிசெய்ய வேண்டும் என்றும், இளம்வயதினருக்கு இன்னும் நிறைய செயல்பாடுகள் இருக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. மாஸ்டருடன் தொடர்பு, அன்பு மற்றும் சகோரத்துவம் ஆகியவற்றை, அனைத்து பங்கேற்பாளர்களும் உணர்ந்தனர்.

## புது நியமனம்

நவம்பர் 1, 2010லிருந்து, சகோ. U.P.தாவன், கரக்பூர் க்ரெஸ்ட் துணை இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## கடந்த காலத்தைப்பற்றிய ஒருபார்வை

1976மே - ஜூன் இடைப்பட்ட நாட்களில், பாபுஜி மகராஜின் ஐரோப்பா பயணத்தின்போது, மாஸ்டரும் உடன் சென்றார். இந்தப்பயணத்தின் போது அவர்கள், டென்மார்க், ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, பிரான்ஸ் மற்றும் இத்தாலி ஆகிய இடங்களுக்குச் சென்றனர். இந்தப்பயணத்தைப்பற்றிய விவரங்கள் முதலில் "ஐரோப்பாவில் சகஜ மார்க்கம்" என்ற புத்தகத்தில் வெளியிடப்பட்டன. பின்பு "யாத்ரா" (வால்யூம் - 1) என்ற பெயரில் மறுபதிப்பாக வெளியிடப்பட்டது.

மாஸ்டரால் கூறப்பட்டுள்ள, இப்பயணத்தைப்பற்றிய சுருக்கமான குறிப்புகள், அன்புக்குரிய பாபுஜி மகராஜ் மீது அவர் கொண்ட அன்பான அக்கறையை வெளிப்படுத்தும். அவர்களின் முழுமையான உறவுமுறை, மிஷனின் பணிகளுக்காக இடைவிடாத உழைப்பு, பல உரைகள் ஆற்றியதைத்தவிர, சாதாரணமாக ஒருநாளைக்கு, 15 தனி சிட்டிங்களுக்கு மேல் கொடுத்தல், மற்றும் குரு சீடருக்கு இடையே, மிக உயர்ந்த ஆன்மீகக் கலந்துரையாடல் ஆகியவற்றைப் பிரதிபலிக்கின்றன.

இந்தப்பயணத்தின்போது, பாபுஜி மகராஜிடம் இருந்து வந்த சில முத்துக்கள்:

" வேதாந்தம் என்பது சிந்திக்கும் வழியாகும்', யோகா என்பது செய்வதன் வழியாகும்; உண்மைநிலை அறிதல் என்பது அனைத்தையும் மறப்பதாகும்".

கேள்வி: நம் செய்தி என்ன?
பாபுஜி: எப்பொழுதும் அமைதி மற்றும் எண்ணத்தில் முரண்பாடு இன்றி இருத்தல்.

கேள்வி: வாழ்க்கை என்பது என்ன?
பாபுஜி: உயிரோட்டமுள்ள வாழ்க்கைதான் உண்மையான வாழ்க்கை.

சூஃபி கவிஞர் சர்மாத் அவர்களின் கவிதையை மேற்கோள் காட்டி, பாபுஜி கூறுகிறார்:

"அன்பின் வலியானது, எந்தவிதக்குறிக்கோளும் இல்லாமல் காற்றில் இங்கும் அங்கும் செல்லும் வண்ணத்துப் பூச்சியைப்போன்றது. ஆனால் அந்தப்பூச்சியால், தீச்சுவாலையில் தன்னை அழித்துக்கொள்ள முடியும்".

அதைத் தொடர்ந்து, பின்வருவதைக் கூறினார். "நம் அன்பு அப்படிப்பட்டதாக இருக்க வேண்டும். கடவுளை நம் இதயங்களில் கொண்டுவர ஆயிரக்கணக்கான வருடங்கள் ஆகும். இருந்தும் ஒருசிலரால் மட்டுமே அதைப் பெறமுடிகிறது. நீங்கள் இறப்பதற்கு முன்பாக இறந்துவிடுவதே ஒரே வழியாகும்."

"பாவிகளுக்கு நரகமும், முட்டாள்களுக்கு சுவர்க்கமும் உள்ளது. முக்தி பெற்ற ஆன்மாக்களுக்கு ஒளி உலகம் உள்ளது. இது எனது கண்டுபிடிப்பு"



## மணப்பாக்கத்தில் ஜப்பானியர் வருகை

ஒரு சுவாரசியமான கலந்துரையாடல்



செப்டம்பர் 9ம் தேதி, ஜப்பான் யோகா அசோசியேஷனின் 50 அங்கத்தினர், அவர்களது தலைவர் சென்சீதஹாரா ஹோடோ மற்றும் உபதலைவர் சகோதரி ஒகியாவோகிமிகோ ஆகியோருடன், சென்னை பாபுஜி மெமோரியல் ஆசிரமத்தில் இரண்டு மணி நேரம் இருந்தனர். ஆசிரம மேனேஜர் சகோ. சத்தியநாராயணன், அவர்களுக்கு ஆசிரமத்தை சுட்டிக்காட்டினார். பின் அவர்கள், 'D' ப்ளாக்கில் உள்ள மீட்டிங் அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு சிறுபுத்தகங்கள், ஜப்பானில் உள்ள பிரிபெக்டகளின் பெயர்கள் மற்றும் சத்சங்கம் நடக்கும் இடங்களைப் பற்றிய தகவல்கள் ஆகியவை வழங்கப்பட்டன.

நகோயா, ஜப்பான் ஆகிய இடங்களில் உள்ள, பிரிபெக்ட்கள் மற்றும் நிர்வாகத்தினர் உடன் இணையதளம் மூலமாகத் தொடர்பு கொள்ள, தகவல் தொடர்பியலின் தொழில்நுட்பங்கள், சிறப்பான முறையில் உபயோகப்படுத்தப்பட்டு, ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. முதலில், சகோதரி நித்யா ஸ்ரீராம், ஜப்பானியமொழியில் சகஜ மார்க்கம் பற்றிக் கூறினார். ஆசிரமத்தின் நாட்டுப் பொறுப்பாளரான சகோ. ஸ்ரீராம், தன்னை ஜப்பானிய மொழியில் அறிமுகப்படுத்திக் கொண்டார். அதன்பின் பயிற்சிமுறை, மிஷன் பற்றி, சகோதரி எரினா நகாமுரா, சகோ. கானே மற்றும் சகோதரி கிளாரிசா பெக் ஆகியோர் உரையாற்றினர். ஜப்பானிய மொழியில் இருந்த இந்த உரைகளை, வந்திருந்த அனைவரும் கைதட்டி வரவேற்றனர். இரண்டு அல்லது மூன்று பேரை தவிர, அனைவரும் ஜப்பானில் யோகா ஆசிரியர்களாகப் பணிபுரியும் பெண்கள் ஆவர்.

பின்பு, சகோ. துரை பேசியதை, இக்கூட்டத்தை நடத்தியவர்களுள் ஒருவரான, திரு. மார்கஸ் (டோக்கியோவில் உள்ள இந்தியர்) மொழியாக்கம் செய்தார். தனது 80 வது வயதில் இருக்கும் சென்சேய், இதனை மிகவும் பாராட்டியதுடன், பல வருடங்களுக்கு முன்பு, ஆசிரமத்தில் வெறும் ஓலைக்குடில்கள் மட்டுமே இருந்தபோது, தான் வருகை புரிந்திருப்பதாகக் கூறினார்.

ஜப்பானில் நமது சேவையை இலவசமாகப் பெற்றுக்கொள்ள வரவேற்கப்படுகிறார்கள் என்று அவர்களுக்குக் கூறப்பட்டது. தேநீரும், சிற்றுண்டியும் அளித்தபின்னர், ஜப்பானுக்குத் திரும்பிச் செல்ல மாலை 6.30 மணிக்கு அவர்கள் விமானநிலயத்திற்குச் சென்றனர்.



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## தமிழ் நாடு தென் மண்டலம் - ஒரு புதுப்பிக்கப்பட்ட பலம்

தமிழ் நாட்டைச் சேர்ந்த, கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின், நாட்டுப்புறப்பகுதிகளில், மிஷனின் வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன், சகோதரர் A. P. துரை, செப்டம்பர் 2010, 3-ம் தேதி முதல் 6-ம் தேதி வரை, ஒரு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். ஒரு சில அப்யாசிகளை மட்டுமே கொண்டுள்ள மையங்கள், (வடக்கங்குளம், நாங்குநேரி, கொட்டாரம்) மற்றும் நாட்டுப்புறப் பகுதிகளிலுள்ள (பனகுடி, தோவாலை, ராதாபுரம், சிதம்பரபுரம், கொலியங்குளம், மானூர் மற்றும் கரையிருப்பு) போன்ற புதிய இடங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, அங்கு வளர்ச்சிக்கான வழிமுறைகளைக் கண்டறிவதே இதன் நோக்கமாகும். சகோதரர் துரை அவர்கள், இல்லக் கூட்டங்கள் மற்றும் சில வரவேற்புக்கூட்டங்கள் வாயிலாக, திறம் வாய்ந்த அப்யாசிகளை அணுகினார். அப்யாசிகள் தாங்களாகவே, மாஸ்டரின் பணிகளை மேற்கொண்டு செயல்படுத்தும் நோக்கத்துடன், அவர்களுக்கு முன்பே தெரிந்திருந்த நபர்கள் மற்றும் சகஜ மார்க்கம் பற்றி ஓரளவு தெரிந்து வைத்திருக்கும் நபர்களை அழைத்து வருவதை அவர் கவனித்தார்.

3 செப்டம்பர் அன்று, கன்னியாகுமரியிலும் மற்றும் சமீபத்தில் வளர்ச்சி பெற்ற நாகர்கோயிலின் துணை மையமான கொட்டாரத்திலும் அவர் வரவேற்புக்கூட்டம் ஒன்றை நடத்தினார். அங்கு அப்யாசிகளுடன் கலந்துரையாடல்களும் நடைபெற்றன. அவர் பிறகு நாகர்கோயில் தியானக் கூடத்தைச் சென்றடைந்தார். அங்கு கூடியிருந்த அப்யாசிகள், மாஸ்டருடன் ஒன்றாதல் என்ற தலைப்பில் பேசும்படி ஊக்குவிக்கப்பட்டனர். அதன் பின்னர் நாகர்கோயிலிருந்து 10 கி.மீ. தூரத்திலுள்ள தோவாலையில், ஒரு இல்லக் கூட்டத்தில் கலந்து கொண்டார். வரவேற்பாளர்கள் அனைவரும், பிரசெப்டர்கள் வழங்கிய விளக்கவுரைகளால் முழுவதுமாக ஈர்க்கப்பட்டனர்.

4-ஆம் தேதி அன்று நாங்குநேரி மையத்திலும், மேலும் ராதாபுரம் பகுதியிலும் இல்லக்கூட்டம் நடத்தப்பட்டது. பின்னர், அவர் கொலியங்குளத்திலுள்ள ஒரு இல்லத்திற்கு சென்றார். அந்த இல்லத்தில் அண்டை வீட்டார்கள் கூடியிருந்தனர். அங்கு நடைபெற்ற உரையின் பின்னர், அவர்கள் தியானம் செய்ய முடிவெடுத்தனர். அவர், இரவு வடக்கங்குளத்திற்கு திரும்பியதுடன், சத்சங்கமும் நடத்தி, பயிற்சி சம்பந்தமான அப்யாசிகளின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

5-ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) அன்று திருநெல்வேலி, நாகர்கோயில் மற்றும் கொட்டாரம் மையங்களைச் சேர்ந்த, சுமார் 50 அப்யாசிகள் ஒன்று சேர, வடக்கங்குளம் மையத்தில் ஒரு முழு நாள் விழாவில் சகோதரர் துரை கலந்து கொண்டார். சத்சங்கத்தைத் தொடர்ந்து அப்யாசிகளின் உரைகள், பிரசெப்டர்களின் விளக்கங்கள், கலந்துரையாடல்கள், மாஸ்டரின் DVD உரைகள் மற்றும் மாஸ்டரின் போதனைகள் தொடர்பான விளக்கவுரைகள் இருந்தன. பிறகு, 25 வரவேற்பாளர்களுக்கு ஒரு வரவேற்புக்கூட்டம் நடத்தப்பட்டது. அதில் 12 பேர், அறிமுக சிட்டிங் பெற்றுக்கொள்ள விருப்பம் தெரிவித்தனர்.

6 ம் தேதிஅன்று, திருநெல்வேலி ஆசிரமத்திற்கு சென்றதுடன், மானூர் மற்றும் குடியிருப்பு கிராமங்களில் இல்லக் கூட்டங்கள் நடத்தினார்.

இந்தப் பயணத்தின் போது சகோதரர் துரை கவனித்தவை:

- ❖ மாஸ்டரால் விதைக்கப்பட்ட விதைகள், அறுவடைக்கு தயாராக இருப்பதையும், அதற்கு அதிகப்படியான பணியாளர்கள் குறிப்பாக பிரசெப்டர்கள், அவர்தம் மையங்களை விட்டு வெளியே சென்று, புதிய மையங்களை உருவாக்க, மற்றும் அம்மையங்கள் தன்னிச்சையாக செயல்படும் வரை உதவ தேவைப்படுகிறார்கள்.
- ❖ புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அப்யாசிகள், ஒவ்வொரு வாரமும் தனி அமர்வுகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.
- ❖ பிரசெப்டர்கள், புதிய அப்யாசிகளிடத்தில் சரியான பயிற்சிமுறை பற்றி, தெளிவுபடுத்துதல் வேண்டும்.
- ❖ குழு செயல்பாடுகளான, இல்லக்கூட்டங்கள் மற்றும் வரவேற்புக்கூட்டங்கள், பிரசெப்டர்கள் மற்றும் அப்யாசிகளிடத்தில், ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தைக் கொண்டுவரும். அதிகப்படியான உற்சாகத்தை, அந்த மாதிரியான நிகழ்ச்சிகளில் பார்க்க முடிகிறது. மேலும், மாஸ்டரின் பிரசன்னத்தை, அவரது பணிகளில் ஈடுபட்டிருக்கும் போதெல்லாம் உணர முடிகிறது.

இந்தப் பயணத்தைத் தொடர்ந்து, உடனடியாக, தமிழ் நாடு தென் மண்டலம், மையப்பொறுப்பாளார், சகோதரர் T. V. விஸ்வநாத ராவ் அவர்கள், விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள பல்வேறு மையங்களுக்கு 10 முதல் 12 செப்டம்பர் வரை பயணித்தார்.

10-ஆம் தேதியன்று, சின்ன வள்ளிக்குளம் ஆசிரமத்தில் விருதுநகர், அருப்புக்கோட்டை மற்றும் கரியபட்டி மையங்களைச் சேர்ந்த, சுமார் 50 அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடத்தினார். அப்யாசிகளின் அறிமுகத்தைத் தொடர்ந்து, அவர்களிடம் மதியம்வரை உரையாடினார்.

பின்னர் கோவில்பட்டியில், சுமார் 20 அப்யாசிகள் சத்சங்கத்தில் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து பயிற்சிமுறை பற்றிய ஒரு கேள்வி பதில் பகுதியும் நடைபெற்றது.

11 ம் தேதி காலை, அருப்புக்கோட்டை துணை மையத்திற்குச் சென்று, சத்சங்கம் நடத்தியதுடன், அங்கு கூடியிருந்த 25 அப்யாசிகளிடத்தில் உரையாடினார். மாலை ஸ்ரீவில்லிபுத்தூரில், 45 அப்யாசிகளுக்கு சத்சங்கம் நடந்தவுடன், ஒரு கேள்வி பதில் பகுதியும் நடைபெற்றது. அனைத்து அப்யாசிகளும், ஆசிரமத்திற்காக இடம் வாங்குவதில், தங்களுக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

12 செப்டம்பர் அன்று, ராஜபாளையத்தில், 70 அப்யாசிகள் கலந்து கொள்ள, சத்சங்கம் நடத்தினார். அதனைத் தொடர்ந்து, பாதி நாள் நிகழ்ச்சியாக, பயிற்சிமுறை மற்றும் குண மேம்பாடு பற்றிய, ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது.

மதியம் அவர், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த தென்காசியை அடைந்தார். புளியங்குடி மற்றும் கடையநல்லூர் துணை மையங்களைச் சேர்ந்த அப்யாசிகள் உட்பட, அங்கு கூடியிருந்த அனைவருக்கும், சத்சங்கம் நடத்தினார். அப்யாசிகள், சகஜ மார்க்கம் பற்றி தாங்கள் தெரிந்து கொண்டதையும், இதுவரை தாங்கள் கண்ட மாற்றங்களையும் தெரிவித்தனர்.

இந்த உரையாடலுக்குப்பின், சகோதரர் T.V.விஸ்வநாத ராவ், புளியங்குடி துணை மையத்தை அடைந்தார். அங்கு 35 அப்யாசிகள் தற்போது பயிற்சி செய்கின்றனர். பின்னர் அங்கிருந்து இரவு திருப்பூருக்கு திரும்பினார்.


வடக்கன்குளம்


நாங்குனேரி

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்



## ஜபல்பூரில், மண்டல பிரசெப்டர்கள் சந்திப்பு (மத்திய பிரதேசம்) 21 மற்றும் 22, ஆகஸ்ட், 2010

சமீபத்தில் வெளியிடப்பட்ட பிரசெப்டர்களுக்கான DVD தொகுப்பின் ஒளிபரப்புடன், கூட்டம் தொடங்கியது. சகோதரர் சச்சின் சின்ஹா, GIS வரைபட உதவியுடன், மத்திய பிரதேசத்தில் உள்ள அப்யாசிகள் மற்றும் ஆசிரமங்களின் எண்ணிக்கையை காண்பித்தார். முதலில் சகோதரர். டாக்டர். N.V.தேஷ்பாண்டே, பயிற்சி அளிக்கும் வழக்கமான முறைக்கு நேர் எதிராக, எவ்வாறு ஒரு பிரிபெக்டின் பணியில், முதலில் திறன் வழங்கப்பட்டு, பின் அதன் மூலம் பணி ஆற்றி, கற்று, வளர்ச்சி பெறப்படுகிறது என்பதைத் தன் சிறப்பாக ஆராய்ந்த உரையின் மூலம் தெரிவித்தார்.

இதுவே சகஜ மார்க்கத்தின் தனித்தன்மை ஆகும் என்றும் கூறினார். பின்னர், பத்து நியமங்களிலிருந்து, சில முக்கிய கேள்விகள் உரையாடல்களுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

சில பிரசெப்டர்கள், அவர்களது அனுபவங்களை மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து, கேள்வி-பதில் பகுதி, விளையாட்டு மற்றும் DVD ஒளிபரப்பு இடம்பெற்றது.

இரண்டாவது நாளன்று மீண்டும் DVD ஒளிபரப்பப்பட்டது. அந்த மண்டலத்தில் செயலாற்றும் பிரசெப்டர்கள் பற்றிய புள்ளி விபரங்கள், அனைவருடனும் பகிர்ந்து கொள்ளப்பட்டன. அதனை தொடர்ந்து, அறிக்கை, வழிமுறை மற்றும் அனுபவங்கள் பற்றி, மண்டல கட்டுரை ஒருங்கிணைப்பாளர், சகோதரர். நவீன் மிஸ்ரா கூறினார்.

மதிய உணவிற்குப் பின்னர், சகோதரர். ஆனந்த் பர்மாரின் "மின்னஞ்சல் மற்றும் மிஷன் இணையதளம்" பற்றிய தெளிவான விளக்கவுரை, அனைவருக்கும் பயனாக அமைந்தது. ஏறத்தாழ 50%அப்யாசிகள், மிஷனின் புதிய இணையதளம் பற்றி தெரியாமல் இருப்பதை, அறிய முடிந்தது. சகோதரர். சச்சின் சின்ஹா "அவரை உள்முகப்படுத்துங்கள்" என்ற தலைப்பில் பேசினார். "மத்திய பிரதேச மண்டலம் 2011" பற்றி, 10 செயல்திட்டங்கள் உள்ளடங்கிய விளக்கவுரையினை வழங்கினார்.

மத்திய பிரதேச மண்டலத்தின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும், சகோதரர். ராஜேஷ் ராவெர்கர், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் SMRTI ஒருங்கிணைப்பாளர்களைச் சந்தித்தது பற்றிய அறிக்கையை வழங்கினார். மேலும், அடுத்த ஆண்டிற்கான செயல்திட்ட அட்டவணை பற்றிய, அடிப்படை பணிகள் முடிவடைந்துவிட்டன என்றும், அது தொகுக்கப்பட்டு அனைவருக்கும் வழங்கப்படும் என்றும் கூறினார். ஜபல்பூர் மையப்பொறுப்பாளர் சகோதரர் ஆனந்த், வந்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து உரை நிகழ்த்தினார். இந்த வெற்றிகரமான நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்தியமைக்காக, ஜபல்பூர் மையத்தின் அப்யாசிகளுக்கு நன்றி தெரிவித்தார். சுமார் 50 பிரசெப்டர்கள் மற்றும் 50 ஆற்றல் மிக்க தன்னார்வத் தொண்டர்கள், இந்த கூட்டத்தில் பங்கேற்றனர்.

## மையப்பொறுப்பாளர்கள் மற்றும் பிரிபெக்ட்களின் பொறுப்பாளர்கள் கூட்டம் (தமிழ் நாடு வடக்கு மண்டலம்)

தமிழ் நாடு மற்றும் அந்தமான் நிகோபர் தீவுகளிலிருந்து, சுமார் 52 பங்கேற்பாளர்கள், 11 செப்டம்பர் அன்று மணப்பாக்கம், சென்னை ஆசிரமத்தில் கூடியிருந்தனர்.

சகோதரர் A.P. துரை (இணை செயலாளர்) மற்றும் சகோதரர். S.பிரகாஷ் (மண்டல பொறுப்பாளர்) நிகழ்ச்சியை தொடங்கி வைத்து உரை வழங்கினர்.

முன்னதாகவே குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவர்கள் தயார் செய்து கொள்வதற்காக தலைப்பும் கொடுக்கப்பட்டது. "அப்யாசிகளின் ஆன்மீக முன்னேற்றத்திற்கான செயல்திட்டங்கள்", "மையத்தின் நிலையான வளர்ச்சி", "அப்யாசிகள் மத்தியில் குணாதிசய மாற்றங்கள்" மற்றும் "நன்னெறி சார்ந்த கல்வித்திட்டம் மூலம் இளைஞர்கள் மீது அதிகப்படியான கவனிப்பு" போன்றவை கொடுக்கப்பட்ட தலைப்புக்கள் ஆகும். இந்த உரையாடாலின் மூலம் கிடைக்கப்பெற்ற முக்கிய அம்சங்கள் - மிஷன் நூல்களைப் படிக்க வேண்டியதன் அவசியம், தன்னார்வத் தொண்டு மூலம் சேவை, உள்ளார்ந்த வழிபாடு, மற்றவர்களுக்காகப் பிரார்த்தனை, ஒரு அப்யாசிக்கு மாஸ்டரிடம் சரியான அறிமுகம், ஒழுங்குமுறை, அன்புடன் பயிற்சி செய்தல், நிலையான நினைவு, உணர்வு மற்றும் உணர்ச்சிப் பெருக்கு இவற்றிற்கிடையேயான வித்தியாசங்களைக் கற்றல், நன்னெறிப் பண்புகள், குழுவாக செயல்படுதல் போன்றவை ஆகும். இது ஒரு நல்ல கற்றுக் கொண்ட அனுபவமாக இருந்தது. இவற்றிலிருந்து எடுத்துக் கொண்டு சிந்திப்பதற்கும், செயல்படுத்துவதற்கும் அதிக விஷயங்கள் இருந்தன.

வேலூர் மையப்பொறுப்பாளர் சகோதரர். இலட்சுமி நாராயணன், தனி அமர்வுகள் மற்றும் பிரசெப்டர்கள் அவர்தம் மையங்களை விட்டு மற்ற இடங்களுக்குச் செல்லுதல் போன்றவற்றின் முக்கியத்துவம் பற்றிப் பேசினார். மேலும் அவர், அப்யாசி பயிற்றுவிப்பு நிகழ்ச்சி, அனைத்து மையங்களிலும் பெரிய மாற்றங்களைக் கொண்டுவருகிறது என்றும், மைய அளவிலான கூட்டங்கள் நடத்துதல், மற்றும் புதிய மையங்களைக் கண்டுபிடித்தல் வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

முக்கிய துறைகளான SMRTI, உறுப்பினர் துறை, பதிப்பகம் மற்றும் கணக்கியல் இவற்றிலிருந்து, தெள்ளத் தெளிவாக, இந்த துறைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பது பற்றியும், மையங்களிலிருந்து இவற்றின் எதிர்பார்ப்புகள் பற்றியும் விளக்கவுரை வழங்கினர்.

சகோதரர் S.பிரகாஷ் தனது முடிவுரையில், முந்தைய உரைகளிலிருந்து எடுக்கப்பட்ட 10 செயல்திட்டங்களை, வழங்கினார். அவை - அப்யாசி பயிற்றுவிப்பு நிகழ்ச்சிகளை அனைத்து மையங்களிலும் நடத்துதல், வரவேற்புக்கூட்டங்கள் / இல்லக் கூட்டங்கள் / வரவேற்பு மேஜை, தனி நபர் சாதனா மற்றும் அமர்வுகள், பிரிபெக்டகளின் பரிமாற்றப் பயணம், ஞாயிற்றுக்கிழமை செயல்கள், புது மைய வளர்ச்சிகள், இளைஞர்கள் முன்னேற்றம், பண்டாராக்களில் பங்கேற்றல், மணப்பாக்க வருகை மற்றும் மிஷன் புத்தகங்களை நன்றாகப் பயன்படுத்துதல் ஆகியவை ஆகும். பங்கேற்பாளர்கள், மாஸ்டரை சந்தித்தனர். மாஸ்டர் அனைவரிடமும் "இதற்குப் பின்னர் நன்றாக செயலாற்றுங்கள்" என்று கூறினார்.



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# அப்யாசி பயிற்சி நிகழ்ச்சி


அலகாபாத்


ராஞ்சி

இந்தியா முழுவதிலும் உள்ள மையங்களில், ஸ்ம்ருதியால் வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சியானது நடைபெற்று வருகின்றது. இந்தப் பயிற்சியானது, பயனுள்ள வகையிலும், சகஜ மார்க்கத்தைத் தெளிவாக புரிந்துகொள்ளும் வகையிலும், சாதனாவை தொடர்ந்து செய்வதற்கான தளரா ஊக்கத்தையும் அளித்ததாக, அப்யாசிகள் கூறினர். இப்பயிற்சியானது, சகஜ மார்க்க சாதனாவைப் பற்றிய அனைத்து கருத்துகளையும், தெளிவாக புரிந்துகொள்ளவும் உதவியாக இருந்தது. தினசரி பயிற்சி குறித்த அனைத்து வினாக்களுக்கும், ஐயப்பாடுகளுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது. இந்த பயிற்சியானது, தீவிர உற்சாகத்துடனும், தகவல்களை கேட்டுப் பெறும் விதத்திலும் பெற்றுக் கொள்ளப்பட்டது. நிறைய அப்யாசிகள் ஒலி-ஒளி முறையில், சாதனாவை குறித்து மாஸ்டர் கொடுத்த விளக்கங்களை, இடை இடையே பகிர்ந்து கொண்டனர். இந்த பயிற்சியின் விளைவாக, டைரி எழுதுவதன் முக்கியத்துவத்தையும், தொடர்ந்து மிஷன் புத்தகங்களை படிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் அப்யாசிகள் உணர்ந்தனர்.

| மையம் | தேதி | பங்கேற்கும் மையங்கள் | ஒருங்கிணைப்பாளர் |
|---|---|---|---|
| சத்தியமங்கலம் | ஆகஸ்ட்29 | சத்தியமங்கலம், புளியம்பட்டி மற்றும் அன்னூர் மையங்கள் | சகோ.அசோகன், சகோ. அண்ணாதுரை கோயம்புத்தூர் பிரிபெக்ட் சகோ. பழனிகுமரன் நடத்தினார். |
| KGF மையம் | செப்.5 | KGF,ம் முல்பாகல், குப்பம்(ஆ.பி) | சகோ. சசிகாந்த். சகோ. ஸ்ரீதர் (மைசூர்) |
| ஜாம்ஷெட்பூர் | செப்.18 | | சகோதரி அனசூயா ராமச்சந்திரன் |
| உனா, H.P. | அக்.3 | உனா மற்றும் அருகில்உள்ள பாஜோரா(குல்லு) பாலாம்பூர் | ஜம்முவிலிருந்து அப்யாசி பயிற்சிகுழு |
| மும்பை | ஆகஸ்ட்14 | | சகோ.மணி |
| நான்பெட் | ஆகஸ்ட்22 | | டாக்டர் பரிஹர், டாக்டர் சௌத்ரி - சிக்ஹலி மையத்திலிருந்து |
| சேடம், குல்பர்கா | செப். 5 | | |
| ராய்ச்சூர், வட கர்நாடகா | செப். 12 | | சகோ.ப்ரஹலாத் பக்னிகர் |
| குல்பர்கா | செப். 19 | | சகோ.நிஜலிங்கப்பா, சகோ.மகேஷ்தேஷ்பாண்டே |
| கர்நூல் | ஆகஸ்ட்22 | | |
| அனந்த்பூர் | ஆகஸ்ட்29 | | |
| நந்தியால் | செப். 12 | | |
| கடப்பா | செப்.19 | | |
| ஹிந்துபூர் | அக்.10 | | ஸ்ம்ருதி சௌபே, சகோதரி நீராவர்மா,சகோ.இந்து பாண்டே,சகோ.அதுல்ஜெயின் |
| ராஞ்சி | அக்.2 | | |
| விருதுநகர் | செப். 26 | விருதுநகர், ஸ்ரீவல்லிபுத்தூர், சிவகாசி, கோவில்பட்டி | சகோ.பாலசுப்பிரமணியம் |
| ராஞ்சி | செப். 26 | பீகார், ஜார்க்கண்ட் சகோ.பாலசுப்பிரமணியம் | சகோதரி அனசூயா ராமசந்திரன் |


விருதுநகர்


அனந்த்பூர்


சேடம்

## மண்டல கருத்தரங்கு - ஆலுவா



மண்டல அளவிலான மூன்று நாள் கருத்தரங்கு, ஆலுவாவில் நடைபெற்றது. சத்சங்கத்துடன் கருத்தரங்கு ஆரம்பிக்கப்பட்டது. முதல் அமர்வில், ஸ்ம்ருதியால் தயார் செய்யப்பட்ட குறுந்தகட்டின் அடிப்படையில், பயிற்சி நிகழ்ச்சி வழங்கப்பட்டது. மதிய உணவிற்கு பிறகு, அப்யாசிகளால் அளிக்கப்பட்ட உரைகளைப் பற்றிய கலந்துரையாடல் இருந்தது. பினனர், சகோ. என். பிரகாஷ், கருத்தரங்கைப் பற்றிய சிறிய உரை நிகழ்த்தி, சத்சங்கம் வழங்கினார். பிறகு, அங்கே நடந்த சகஜமான கலந்துரையாடலின் பொழுது, கேரளாவில் சகஜ மார்க்கம் வளர்ந்து வருவதைக் கண்டு, மாஸ்டர் மகிழ்ச்சியாக இருக்கிறார் என்பதைப் பகிர்ந்து கொண்டார்.

11-ந் தேதி காலை 6.30மணிக்கு, பிரபெக்ட்களுக்கான சத்சங்கம் நடந்தது. அதனை தொடர்ந்து 9.00 மணிக்கு அனைவருக்கும் சத்சங்கம் வழங்கப்பட்டது. பிறகு, சகோ. என்.பிரகாஷ், மாஸ்டரைக் கவனித்தல், கீழ்ப்படிதல் மற்றும் அவரை ஆர்வத்துடன் பின்பற்றுதல் போன்ற கருத்துக்களைக் கொண்ட, ஒளியூட்டும் உரையினை வழங்கினார். சகோ. சி. சதீசன், அந்த பேச்சை அருமையாக மலையாளத்தில் மொழிபெயர்த்து வழங்கினார். மதிய உணவிற்குப் பிறகு, அப்யாசிகள் அதனைப் பற்றிய தங்களது கண்ணோட்டத்தை வெளிப்படுத்தினர். பின்னர், மண்டல பொறுப்பாளர் சகோ. K.U. மோகன் அவர்களால், அங்கு கூடியிருந்த உள்ளூர் மக்களுக்கு, பொதுக்கூட்ட அறிமுக நிகழ்ச்சியானது வழங்கப்பட்டது. 12-ந் தேதி காலை 7.30மணி சத்சங்கத்திற்கு பிறகு சகோ. சுந்தரம் மற்றும் சகோ. பிரகாஷ் அவர்களின் சிறிய உரையுடன் கருத்தரங்கானது முடிவடைந்தது. இக் கருத்தரங்கிற்கு, ஆலுவாவைச் சுற்றியுள்ள 7 மையங்கள் மற்றும் 7 துணை மையங்களில் இருந்து, 230 அப்யாசிகள் கலந்து கொண்டனர்.

## அலகாபாத்

ஆகஸ்ட் 15, 2010 அன்று, அலகாபாத் மையத்தில், அப்யாசிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சியானது, ஹிந்தியில் வழங்கப்பட்டது. இந் நிகழ்ச்சியில், அலகாபாத் மற்றும் ஜான்சி மையங்களில் இருந்து வந்த 35 அப்யாசிகள், பயிற்சியாளர்களாகக் கலந்து கொண்டனர். மண்டல பொறுப்பாளர் சகோ. திரிவேதி வரவேற்புரை வழங்கினார். சகோ. உமாசங்கர் [செயலாளர்] அவர்களால் நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்பட்டது, சகோதரி. லலிதா சர்மா, தன்னார்வ தொண்டர் குழுவுடன் இணைந்து பயிற்சியை நடத்தினார். இதே மையத்தில், செப்டம்பர் 5-ந் தேதி மற்றொரு அப்யாசி பயிற்சி நிகழ்ச்சியானது நடத்தப்பட்டது. அலகாபாத், பண்டா, தர்வாய், ஜான்சி மற்றும் பம்பூரிலிருந்து 36 அப்யாசிகள் கலந்து கொண்டனர்.

## திருப்பூர், தமிழ்நாடு [தெற்கு]



தேசிய நலப்பணி திட்டத்தின் கீழ், K.S.C. பள்ளியில் இருந்து வந்த 25 மாணவர்களுக்கு, திருப்பூர், டைமண்ட் ஜுபிளி பார்க்கில், செப்டம்பர் 25-ந் தேதி முதல், 6 நாட்கள் முகாம் நடத்தப்பட்டது. மாணவர்கள் ஆசிரம பராமரிப்பு பணியில் ஈடுபட்டனர். ஒவ்வொரு நாளும், மதியம் 2.30 மணிக்கு, ஒழுக்கம் மற்றும் தனி மனிதப் பண்புகள் பற்றிய மாஸ்டரின் சிந்தனைகள் பற்றி பேசப்பட்டது.

அக்டோபர் 3, ஞாயிறு அன்று, புதிய அப்யாசிகளுக்கான அறிமுக கூட்டம், திருப்பூர், செட்டிப்பாளையம் யோகாசிரமத்தில் நடந்தது. சத்சங்கத்திற்கு பிறகு, மண்டல பொறுப்பாளர் சகோ. T.V. விச்வநாத ராவ், வரவேற்புரை ஆற்றினார். இந் நிகழ்ச்சியில், 45 பேர் கலந்து கொண்டனர். மையப் பொறுப்பாளர் சகோ.R. சண்முகம் மற்றும் N. பிரகாஷ் அவர்களால் சகஜ மார்க்கம் குறித்து விரிவாகவும் தெளிவாக புரியும்படி விளக்கப்பட்டது. 22 பேர் மிஷனில் சேர்ந்து பயிற்சி செய்வதாக, தங்களது ஆர்வத்தை வெளிப்படுத்தினர். அன்றே அவர்கள் அனைவரும் முதல் அறிமுக தியானம் பெற்றுக் கொண்டனர்.

## ராய்ப்பூர்

ராய்ப்பூர் மையத்தின் சார்பாக, புதிய அப்யாசிகளுக்கான அறிமுக நிகழ்ச்சியானது "இளைஞரின் நடைமுறை வாழ்க்கையில் தியானம்" என்ற தலைப்பில், செப்டம்பர் 23 அன்று, 65.Bn C.R.P.F. தலைமையகம், பாராதேரா முகாமில் வழங்கப்பட்டது. இந் நிகழ்ச்சியானது சகோ. சந்தீப், DIGP,CRPF, ராய்ப்பூர், அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.



சகோதரி ரஜ்னி தத்தா அவர்கள், மனிதனின் மனதானது நிலையற்று எப்பொழுதும் ஊசலாடிக்கொண்டிருக்கும் பந்து போல் உள்ளது என்பது பற்றியும், அதை நீக்குவதற்கான வழிமுறைகளை பற்றியும் பேசினார். "இளைஞர்களின் நடைமுறை வாழ்க்கையில் தியானத்தின் பங்கு" என்ற தலைப்பில் சகோ. தீபக் தியாகி உரையாற்றினார். மேலும் அவர், தியானத்தின் முக்கியத்துவத்தையும், தியானம் என்பது, தெய்வீகத்தை நோக்கி தொடர்புபடுத்திக் கொள்வது மட்டுமில்லாமல், குடும்பத்தினர் மற்றும் தேசத்தை பற்றிய அக்கறையையும், கலக்கமற்ற நிலையையும், உண்மையான மனநிறைவுடன் கூடிய மகிழ்ச்சியையும் அளிக்கிறது எனக்கூறினார். ஜவான்களுடைய அக்கறையான வினாக்களுக்கு சகோ. தியாகி விடையளித்தார். மன அழுத்தம், நம்பிக்கையின்மை, எதிர்பாராத பயம், தூக்கமின்மை போன்றவையே நிறைய பிரச்சினைகளுக்கு முக்கிய காரணங்கள் ஆகும் சகோ.தியாகி, தியானத்தின் திறனையும் வலியுறுத்தி, அனைத்து பிரச்சினைகளையும் எதிர்கொள்ள, தியானம் மட்டுமே சரியான வழிமுறை என்று கூறினார்.

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## விபிஎஸ்இ - கருத்தரங்கு மற்றும் பயிற்சி முகாம், ஆலுவா, கேரளா



ஆலுவாவிலுள்ள கேரள மண்டல ஆசிரமத்தில், ஆலுவா மையத்தின் சார்பாக, ஆகஸ்ட் 29ம் தேதி, 5 முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு, வி.பி.எஸ்.இ கருத்தரங்கம் ஒன்று நடந்தது. இக்கருத்தரங்கில், பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 45 மாணவர்கள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கை, ராஜஸ்ரீ பள்ளி முதல்வரான ஸ்ரீமதி சூசன் ஜான் தொடங்கி வைத்தார். அங்கு ஒப்புவித்தல், பொது பேச்சு மற்றும் இறுதியாக, கேள்வி பதில் போட்டிகளும் மாணவர்களுக்கு நடத்தப்பட்டன. மாணவர்களிடமிருந்து வந்த பதில்கள் மிகவும் உற்சாகமாய் இருந்தன. பெற்றோரிடமிருந்து வந்த கருத்துகளும் நன்கு ஊக்கமளிப்பதாக அமைந்தன. பள்ளி முதல்வர், தன் பள்ளியின் ஆசிரியர்களுக்கும் பயிற்சி முகாம் ஒன்றை நிகழ்த்துமாறு பரிந்துரைத்தார். இதன் விளைவாக, செப்டம்பர் 25, சனிக்கிழமை அன்று, கடுங்கல்லூரை சேர்ந்த ராஜஸ்ரீ SMM பள்ளி ஆசிரியர்களுக்கு, ஒரு நாள் வி.பி.எஸ்.இ பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. சகோ.A.மாதவன், சகோ.T.P.நாராயணன், சகோ.A.ஜெயபிரகாஷ் மற்றும் சகோ.விஜயகிருஷ்ணன் இந்நிகழ்ச்சியில் பேச்சாளர்களாக இருந்தார்கள்.

## வி பி எஸ் இ - சமீபத்திய தகவல்கள் - குஜராத்

பரோடா மையத்தைச் சேர்ந்த சகோ.விலாச் போன்டே என்பவர், தெற்கு குஜராத் மண்டலத்திற்கான வி.பி.எஸ்.இ ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். குஜராத்தில் அனைத்து இடங்களிலும், ஆசிரியர்களுக்கு வி பி எஸ் இ பாடத்திட்டத்தில் பயிற்சி அளிக்க தன்னார்வத்தொண்டர் குழுக்கள், தயார் செய்யப்பட்டு வருகின்றனர். பரோடா, வாப்பி, பாவ்நகர், அஹமதாபாத், சூரத், ஆனந்த், டாமன், நவ்சாரி, வல்சாட், பூஜ், ஜாம்நகர் மற்றும் ராஜ்கோட்டில் உள்ள பள்ளிகளை அணுகியும், தொடர்புடைய தகவல்களை தயார் செய்தும் தொண்டர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. மேலும் அப்யாசிகளின் சிறப்பான விழிப்புணர்விற்காக, அவர்களுக்கும் இது வழங்கப்படுகிறது.

சில பள்ளிகளில் வி.பி.எஸ்.இ வகுப்புகள் தொடங்கிவிட்டன. புதிய பாடத்திட்டத்தின் முழுத் தொகுப்பும், பங்கேற்பவர்களிடத்தில் மிகுந்த அறிவார்வத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆசிரியர்கள் இத்தொகுப்பை முழுமையாக ரசித்து மகிழ்ந்தனர். மேலும், தொண்டர்கள் பயன்படுத்திய, ஆக்கபூர்வமான மற்றும் துணையாகயிருந்த கட்-அவுட்கள், பிளாஷ் கார்டுகள், பிபிடிகள், குறும்படங்கள், விளையாட்டு (உங்களால் முடிந்தவரை வெல்லுங்கள்) மற்றும் குழு கலந்துரையாடல்கள் அவர்களை மிகவும் கவர்ந்தது.

ஒவ்வொரு அரை நாள் நிகழ்ச்சிகளிலும், வித்தியசமான பல்வேறு நிகழ்ச்சிகளை அப்யாசிகளுக்குள் நடத்த முடிவு செய்யப்பட்டது. இது அப்யாசிகளுக்குள் "நவரத்னா"வை உருவாக்கிக் கொள்ள உதவியாக அமையும்.

தற்பொழுது வி.பி.எஸ்.இ-யை, சோதனை செயல்பாடாக, குஜராத்திலுள்ள இரு மண்டலங்களிலும் 10 வெவ்வேறு மையங்களிலும் உள்ள 13 பள்ளிகளிலும் அறிமுகப்படுத்துவதற்கான திட்டம் உள்ளது. பாடத்திட்ட புத்தகங்களை, குஜராத்தி மொழியில், சகோதரி. தாரா சௌஹான் மற்றும் அவரது மொழி பெயர்ப்பு குழுவின் உதவியால் மொழி பெயர்ப்பு செய்யப்படுகிறது.



## கனகபுரா, தெற்கு கர்நாடகா

அப்யாசிகளுக்கு உதவும் வகையில், கனகபுரா லயன்ஸ் கிளப்பில் உறுப்பினராக இருக்கும் சகோ. சுவாமி மற்றும் சகோ. வெங்கடேஷ், வி பி எஸ் இ கருத்தரங்குகளை கனகபுராவில் நடத்த முன் வந்தார்கள். செப்டம்பர் 13ம் தேதி, லயன்ஸ் மேல் தொடக்கப் பள்ளிக்கும், ஹம்சவாஹினி மேல் தொடக்கப் பள்ளிக்கும், 36 ஆசிரியர்களின் பங்கேற்புடன், ஆசிரியர் பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

சகோதரி மாதுரியால் நடத்தப்பட்ட நிகழ்ச்சியானது, 5 நிமிட அமைதியான பிரார்த்தனையுடன் துவங்கியது. அவர் SRCM பற்றிய சிறு அறிமுக உரைக்கு பின், "நன்னெறி என்றால் என்ன?", "நன்னெறியின் அவசியம்", "ஆசிரியர் மற்றும் பெற்றோர்களின் பங்கு", "குழந்தைகளுக்கு சரியான சூழ்நிலையை உருவாக்குதல்" போன்ற சில தலைப்புகளில் பேசினார். விளையாட்டு, மற்றும் குழு கலந்துரையாடல்களும் இருந்தன. பங்கு பெற்றவரிடம் மிகுந்த உற்சாகத்தை பார்க்க முடிந்தது. ஆசிரியர்கள் தங்கள் வகுப்புகளில் வி பி எஸ் இ செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் எண்ணத்துடன் திரும்பிச் சென்றார்கள்.

வி பி எஸ் இ குழு, கனகபுராவிலுள்ள பள்ளிகளுக்கு, மீண்டும் சென்று, ஆசிரியர்களுடன் நட்பார்ந்த கலந்துரையாடலின் மூலம், செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான உதவியை கண்டறியவும், அவர்களிடமிருந்து கருத்துகளைப் பெறுவதற்கும் செல்லும்.

## ராஞ்சி

"அறிவானது ஒருவருக்கு பயனளிக்கவில்லை எனில், அது மன அமைதியற்ற நிலைக்கு அழைத்துச் சென்றுவிடும். கல்வியானது மாணவர்களின் நற்பண்பை மேம்படுத்தவில்லை எனில், அது வாழ்க்கையில் நன்னெறிகளை அவர்களுக்கு உணர்த்தவில்லை எனில், அது ஓர் அர்த்தமற்ற செயல்முறையாக கருதப்படும். தனித்தன்மை வாய்ந்த நாட்டை உருவாக்குவதற்கான கல்வி, இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாணவனுக்கும், உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் அளிக்கப்பட்டுள்ளது என்று கல்வி நிறுவனங்கள் உறுதியளிக்க வேண்டும். நம் நாட்டின் பழமை வாய்ந்த பண்பாடுகளை நினைத்து பெருமைப்படுகிறோம், நமது வருங்காலம் பிரகாசமாக இருக்கும் என்பதிலும் நாம் உறுதியளிக்க வேண்டும்."- டாக்டர்.ஸ்ரீமதி.சரளா பிர்லா

ராஞ்சியில் உள்ள வி பி எஸ் இ தன்னார்வர்கள், நன்னெறி பற்றி சரளா பிர்லா கொடுத்தற்கும் மேல், ஒரு புதிய பாடத்திட்டத்தையும், அதன் அவசியத்தை பற்றியும், கவனத்தை ஈர்க்கும் வகையில் ஓர் செயல் விளக்கத்தை நடத்தினார்கள். 50 ஆசிரியர்கள் இதில் பார்வையாளராக இருந்தார்கள். அவர்கள் நிகழ்ச்சி நடந்த நான்கு மணி நேரமும், ஆழ்ந்து கவனித்த வண்ணம் இருந்தார்கள்.

பள்ளியானது, மேற்கொண்டு எவ்வாறு SMRTI-யுடன் பணியாற்றுவது, மற்றும் அதன் செயல்பாட்டுத் திட்டத்துடன் தங்களது பாடப்பிரிவுகளை எவ்வாறு ஒன்றிணைப்பது, போன்றவைகளை பற்றி பேசுவதற்கும் ஒப்புக் கொண்டது.

தன்னார்வர்கள் சுனந்தா சௌஹான், அனிதா திவாரி, ஷீத்தல் சௌஹான், அனுராதா சௌஹான், சங்கீதா சொமாணி, மனோஜ் திவாரி, டாக்டர். ஷியாம் நாராயண், ராமவ்தார் சாஹு, ஷோபா சாஹு, அருண் குமார் லால் ஆகியோர் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்தினர்.



# ஆர்வம் கொண்ட மாணவர்கள் மற்றும் இளைஞர்கள்

## அகமதாபாத் கருத்தரங்கு

அகமதாபாத் நிர்மா பல்கலைக் கழகத்தின் பயிற்சியாளர் குழுவினர், சாலை ஓரமாக இருந்த SRCM விளம்பரப் பலகையில் "தியானத்தின் மூலமாக மனதினை ஒழுங்குபடுத்துதல்" என்று எழுதப்பட்ட வாசகத்தினை படித்துள்ளனர். அவர்கள் மிஷனைப்பற்றி மேலும் அதிக விபரங்களைத் தெரிந்துகொள்ள ஆர்வம் கொண்டனர். எனவே அடலாஜ் ஆசிரமத்தில் ஒரு கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 2.10.2010 அன்று சுமார் 90 நிமிடங்கள் நடைபெற்ற இக் கருத்தரங்கில், 19-23 க்கும் இடைப்பட்ட வயதுள்ளவர்கள் கலந்து கொண்டனர். இக்கருத்தரங்கினை, மையப்பொறுப்பாளர் சகோ. ஜிக்னேஷ் நடத்தினார். ஆர்வம் உள்ளவர்களுக்கு, அவர்களின் சொந்த நகரங்களில் உள்ள மையங்களின் விபரங்கள் அளிக்கப்பட்டன. பெயர் பலகையின் மூலம் ஆர்வமிக்கவர்கள் மிஷனுக்கு கவரப்பட்டது, உற்சாகம் அளிக்கின்ற நிகழ்வாக இருந்தது.

## சிட்டிபெட், ஆந்திரபிரதேசம்

சமீபத்தில் நடத்தப்பட்ட, 2010 ம் ஆண்டு கட்டுரைப்போட்டியில், சிந்திக்கும் சக்தியினைத் தூண்டும் விதத்தில் தயாரிக்கப்பட்ட தலைப்புகளினால் கவரப்பட்ட, ஆந்திரபிரதேசம் கஜ்வெல் அரசினர் பெண்கள் பட்டப்படிப்புக் கல்லூரி முதல்வர், டாக்டர் வெங்கட ரமணா அவர்கள், பட்டப்படிப்பு மாணவியருக்கு, "மனதினை ஒழுங்கு படுத்துதல்" பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்றினை நடத்த வேண்டுமாய் சிட்டிபெட் மையத்தினைக் கேட்டுக்கொன்டார். 2010 அக்டோபர் 6ம் தேதி நடைபெற்ற கலந்துரையாடல் கருத்தரங்கில், பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த எண்பது மாணவியர்கள் கலந்து கொண்டனர். பிரெசெப்டர்கள் "தியானத்தின் மூலமாக மனதினை ஒழுங்குபடுத்துதல்" மற்றும் "வாழ்வின் ஆரம்பத்திலேயே இலட்சியத்தினை நிர்ணயம் செய்ய வேண்டியதன் தேவை" ஆகிய தலைப்புக்களின் கீழ் உரை நிகழ்த்தினர்.

## கானாபூர், வட கர்நாடகா

செப்டம்பர் 9ம் தேதியன்று, பெல்காம் மாவட்டம் கானாபூர், மாரதாமண்டல் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், "தற்கால சூழலில் உயர் கல்வியில் ஆன்மீக பயிற்சியின் தேவை" என்பது பற்றிய மாநில அளவிலான கருத்தரங்கு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு, கல்லூரி விழா மலரில் வெளியிட ஒரு கட்டுரையினையும் சமர்ப்பிக்கும்படி SRCM அழைக்கப்பட்டது. மாநிலம் முழுவதில் இருந்தும் 150 பிரதிநிதிகளும், மாணவர்களும் அங்கு குழுமியிருந்தனர்.

சகோதரர் ராஜூ கஷம்புர்கர், மிஷன் சார்பாகச் சென்று, தற்கால சூழலில் ஆன்மீக பயிற்சியின் தேவை, மனித வாழ்வின் உண்மையான இலட்சியம், இளைஞர்கள் பயிற்சிசெய்யக்கூடிய ஆன்மீக பயிற்சி முறைகள் போன்ற செய்திகளை உள்ளடக்கிய உரையினை நிகழ்த்தினார். அதன் பின்னர், இந்த பயிற்சிமுறையில் ஆர்வம் காட்டியவர்களுக்கு, மிஷனின் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

## இளைஞர்களுக்கான உயர்நிலை கருத்தரங்கு, பெங்களூரு

பெங்களூரில், இளைஞர்களுக்கான, உறைவிடத்துடன் கூடிய, உயர்நிலை கருத்தரங்கு, செப்டம்பர் 10-12 நடைபெற்றது. "எதிர்காலம் என்பது நாம்தான்" என்பது முக்கிய கருத்தாக இருந்தது. பயிற்சிமுறை, பத்து நியமங்கள், மாற்றத்திற்கான தடைகள், இலட்சியத்தினை ஏற்றுக்கொள்ளுதல், அகங்காரத்தின் சவால், தன்னலமற்ற சேவை, எதிர்கால சந்ததியினர் என்ற முறையில் அவர்களுக்கான பொறுப்புக்கள் ஆகிய பல்வேறு விஷயங்களை ஆழமாக புரிந்துகொள்ள ஒரு மேடை அமைப்பதுதான் இந்த கருத்தரங்கின் குறிக்கோள். இந்த கருத்தரங்கில், சகஜ மார்க்கத்தில் மூன்று வருடத்திற்கும் மேலாக பயிற்சி செய்யும், 20-35 வயதுக்குட்பட்ட 31 அப்யாசிகள் கலந்து கொண்டனர். இளைஞர்களிடம் கருத்துபரிமாற்றம் செய்த பின்னரே, இந்த கருத்தரங்கில் எடுத்துக்கொள்ளப்படவேண்டிய விஷயங்கள் பற்றி முடிவு செய்யப்பட்டது. ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும், அவர்கள் இதுவரை பயணித்த ஆன்மீக பாதையில் பெற்ற அனுபவங்கள், மற்றும் மாஸ்டரிடம் நேரில் பெற்ற விளக்கங்கள், அவற்றின் மூலமாக தாங்கள் கற்றுக்கொண்டவை ஆகியவற்றுடன், தங்களுடைய கருத்துக்களை தக்க ஆதாரங்களுடன் நிலை நிறுத்தி மிகவும் அற்புதமாக தங்களது பணியினைச் செய்தனர்.

பயிற்சியின் முடிவில் அவர்கள் தெரிவித்த விஷயங்கள் மிகவும் உற்சாகம் அளிப்பதாக இருந்தது. இதயத்திற்கும் புத்திக்கும் உள்ள வேறுபாட்டினை முதல் தடவையாக அறிந்து கொண்டதாக சிலரும், தாங்கள் இனி பயிற்சியில் முழுமையாக ஈடுபடப்போவதாகவும், இந்த கருத்தரங்கு சகஜ மார்க்கத்தில் பல்வேறு அம்சங்களை மிக ஆழமாக புரிந்து கொள்ள வகை செய்ததாக சிலரும் தெரிவித்தனர்.

## மங்களூர், தென் கர்நாடகா

செப்டம்பர் 18ம் தேதி, மங்களூர் ஸ்ரீநிவாசா நிர்வாகக் கல்வி பயிற்சி நிலையத்தில், SRCM ஒரு வரவேற்புக்கூட்டம் நடத்தியது. சகோ. பிரசாத் கிருஷ்ணா, கௌரவ பேராசிரியருக்கான நேரத்தில், நிகழ்ச்சியினை நடத்தினார். இதில் வணிக நிர்வாக முதுநிலைப் பட்ட வகுப்பு பயிலும் 120 மாணவர்கள் கலந்து கொண்டனர். "மனதினை ஒழுங்குபடுத்த தியானம்" என்பதுதான் உரையின் தலைப்பு. சகோ.கிருஷ்ணா, வாழ்க்கையில் இலட்சியம் கொள்ளவேண்டியதின் தேவை, காலத்தினை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் ஆகியவற்றினைப்பற்றி விவரித்தார். எனவே, தற்போதய காலத்தினை உயரிய நோக்கத்திற்காகவும், திறம்படவும், நல்லமுறையில் பயன்படுத்த, அங்கிருந்த பார்வையாளர்களை சகஜ மார்க்கத்தில் சேர அழைப்புவிடுத்தார். SRCM மற்றும் பயிற்சிமுறை பற்றி சுருக்கமாக விளக்கினார். கல்லூரி முதல்வரும், துணை முதல்வரும் மிக்க மகிழ்ச்சியடைந்தனர். 16 மாணவர்கள் பயிற்சியில் சேர ஆர்வத்துடன் தங்களது பெயர்களை அளித்தனர்.

கானாபூர்




பெங்களூ



ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்






## சோன்பட், ஹரியானா

சோன்பட் ஆசிரமம், ஃபாசில்பூர் மின் நிலையத்தின் அருகே சோன்பட்-பாஹல்கர் சாலையை ஒட்டியுள்ள பிரிவு 12, பகுதி 4-ல் அமைந்துள்ளது. அது சோன்பட் ரயில் நிலையத்திலிருந்து 4 கி.மீ. தொலைவிலும், பொதுபேருந்து நிலையத்திலிருந்து 3 கி.மீ. தொலைவிலும் உள்ளது. புது தில்லி-சண்டிகர் தேசிய நெடுஞ்சாலை எண் 1ல் இருக்கும் பாஹல்கர் சௌக் இங்கிருந்து 5 கி.மீ. தொலைவில்தான் உள்ளது. ஹரியானா நகர்ப்புற மேம்பாட்டுக் கழகத்தால் (HUDA) 2003ம் ஆண்டு, 1140 சதுர மீட்டர்கள் அளவிலான ஒரு குறு நிலம் ஒதுக்கப்பட்டது. அந்த நிலத்தின் மொத்த விலையும், சோன்பட் மையத்தின் அப்யாசிகளால் பங்களிக்கப்பட்டு, பூமி பூஜை, 2003ம் ஆண்டு டிசம்பர் 5ம் தேதி, மாஸ்டரால் நடத்தப்பட்டது.

2005ம் ஆண்டு, அக்டோபர் 9ம் தேதி அன்று, சோன்பட் மையத்தின், மிக இளைய அப்யாசியால் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டுமானம் தொடங்கப்பட்டது. அக்டோபர் 2007ல் ஆசிரமம் கட்டி முடிக்கப்பட்டது. சோன்பட் மைய அப்யாசிகள், தாராளமாக முழுமனதுடன் பணம் கொடுத்தும், தொண்டாற்றியும் பங்கு பெற்றதன் மூலம், கட்டுமானச் செலவை கணிசமாகக் குறைத்தனர்.

ஆசிரமத்தின் மொத்த கட்டுமான பரப்பளவு, தரைத்தளத்தில் 4162 சதுர அடிகளும், முதல் தளத்தில் 4027 சதுர அடிகளும் ஆகும். தரைத்தளத்தில், ஒவ்வொன்றிலும் 100 அப்யாசிகள் தங்கும் வசதியுள்ள, இரண்டு தங்கு கூடங்கள் உள்ளன. இரு புறங்களில் தாழ்வாரங்களும், மற்றும் உயர்த்தப்பட்ட மேடையுடனும் கூடிய தியான மண்டபம் முதல் தளத்தில் இருக்கிறது. தியான மண்டபத்தின் குவிமாடத்திலிருந்து, ஒரு அழகிய சரவிளக்கு தொங்குகிறது. தேவையான அறைகலன்கள், கணினி மற்றும் படம்காட்டும் கருவி ஆகியவற்றுடன் தரைத்தளத்தில் அமைந்துள்ள விசாலமான அலுவலகம், அப்யாசி பயிற்சி நிரல்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

ஆசிரமத்தில், ஞாயிறு காலை மற்றும் புதன் மாலை சத்சங்கங்கள் வழக்கம் தவறாமல் நடைபெறுகின்றன. மாஸ்டர்களின் பிறந்தநாட்களில் ஆசிரமத்தில் பண்டாராக்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிறன்று, ஒரு முழு நாள் நிகழ்ச்சி நடத்தப்படுவதுடன், அப்யாசி பயிற்சி நிரலும் இந்நாளில் வழக்கம் தவறாமல் நடத்தப்படுகிறது.

ஆசிரமக் கட்டிடம், மூன்று பக்கங்களில் திறந்தவெளியாகவும், ஒரு பக்கத்தில் ஸ்ரீ ராம் சிக்ஷா சதனுடனும் அமையப்பெற்றுள்ளது. இரண்டு பெரிய வாயில்கள், ஆசிரமத்தை அகண்ட பிரிவுச்சாலைகளுடன் இணைக்கின்றன. அழகிய புல்வெளிகள், பூஞ்செடிகள் மற்றும் ஒரு நீரூற்று ஆகியவை ஆசிரமத்துக்கு மேலும் அழகு சேர்க்கின்றன.







To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2009 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.